# பாரதியாரின் கவிதை நடை தனி நடை

# Bharathiar’s Unique Poetic Style

***முனைவர் ப. ராஜசேகர்***
விருந்துநிலை விரிவுரையாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, இந்தியா

**Dr. P. Rajasekhar**
*Guest Lecturer*
*Department of Tamil Literature*
*University of Madras, Chennai, India*

## ஆய்வுச் சுருக்கம்

*ஒரு சமுதாயத்தின் அன்றாட இயக்கத்திற்கும் ஒரு நாட்டின் இயக்கத்திற்கும் மொழி ஒரு முக்கியமான கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பாரதியாரின் வசன கவிதை உரைநடையுமன்று, செய்யுளும் அன்று. இது ஆங்கிலக் கவிதையை ஒட்டி* prose poetry *போன்று எழுதியதாகும். ஆங்கில இலக்கியக் கலைஞர்கள் உரைச் செய்யுள் என்று ஒரு பிரிவைக் கண்டனர். செய்யுள் போன்று அமைந்த உரைநடை அது. தமிழில் இந் நடையை முதன் முதலில் கொண்டு வந்தவர் பாரதி. இத்தகைய மொழிநடை எவ்வாறாக இருந்துள்ளன என்பதை இக்கட்டுரையின் வாயிலாக காணலாம்.*

*பாரதியார் எண்ணியது போன்றே அவருடைய கவிதைகளை மிக எளிமையாக எல்லோரும் படித்தவுடன் புரிந்துகொள்ள முடிகிறது. அவர் எழுதிய கவிதைகளில் ஓரே ஒரு கவிதையை மட்டும் ஈண்டு எடுத்துக்கொண்டு அவருடைய கவிதை மொழிநடை எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதை காணமுடிகிறது. இவ்வாறு ஒரு குறிப்பிட்ட படைப்பாளியின் கவிதையை அல்லது கட்டுரையை எடுத்துக்கொண்டு ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி ஆராய்வது இன்றைய மொழிநடை ஆய்வில்* (stylistic research) *ஒரு சிறப்பு அம்சமாகக் கருதப்படுகிறது. பாரதி பாடிய “ஆரிய தரிசனம்” என்ற கவிதையே இதுபோன்ற சூழ்நிலை ஆய்வுக்கு இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கவிதையில் புத்த தரிசனம், கிருஷ்ணார்ஜீன தரிசனம் என்ற இரண்டு தரிசனங்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.*

## Abstract

*Language has been utilized as a crucial tool for the daily functioning of a society and the governance of a nation. Bharathiar’s prose poetry stands apart from conventional verse and prose, resembling the style of English prose poetry. English literary artists identified a category called ‘prose poetry’, which appears structured like verse yet reads like prose. Bharathiar was the pioneer in introducing this style in Tamil literature. This article seeks to explore the nature of this linguistic style.*

*As envisioned by Bharathiar, his poems are remarkably simple, enabling readers to comprehend their meaning instantly. This article examines how Bharathiar’s poetic style is structured, using one of his poems as a case study. Examining the works of a particular author and connecting them with broader contexts is considered a distinctive aspect of modern stylistic research. Here, Bharathiar’s poem ‘Ariya Darisanam’ serves as a basis for such an analysis. This poem features two instances of philosophical insights: Buddha’s vision and Krishna-Arjuna’s vision, offering a unique context for stylistic exploration.*

**Citation**

Rajasekhar, P. “Bharathiar’s Unique Poetic Style.” *Journal of Tamil Culture and Literature*, vol. 4, no. 1, 2024, pp. 58-63.

*https://doi.org/10.5281/zenodo.20069352*

**நடையியற் கூறுகளும் உத்திகளும்**

*மேலே குறிப்பிடப்பட்ட கவிதை மொழியினை ஆய்வு செய்வதற்குச் சில நடையியற் கூறுகள்* (stylistic features) *எடுத்துக் கொள்ளப்பட்டு இவற்றோடு இக்கவிதையிலே பாரதி எடுத்து விளக்கும் கருத்துக்களைத் தொடர்புபடுத்தி இதன் மொழிநடை இங்கு விளக்கப்பட்டுள்ளது. நடையியற் கூறுகளான சொல்லமைப்பு, தொடரமைப்பு, சொற்பயன்பாடு, யாப்பமைதி, பாடலின் பொருள் போன்றவை இடம் பெற்றுள்ள நிலையினைத் தெளிவாக எடுத்துக்காட்டி பாரதியின் மொழிநடை விளக்கப்பட்டுள்ளன.*

**வால்ட் விட்மன் பற்றி பாரதி**

*"வால்ட் விட்மன்" என்பவர் தலைசிறந்த கவிஞராகப் போற்றப்படுவதை இவர் நன்றாக உணர்ந்திருக்கிறார். அவரைப் பற்றி மகாகவி பாரதியார் குறிப்பிடுகிறார். இதில் பாரதியின் மொழிநடையமைப்பை பார்க்கமுடிகிறது.*

*வால்ட் விட்மன் என்பவர் சமீப காலத்தில் வாழ்ந்த அமெரிக்கா யுனைட்டெட் ஸ்டேட்ஸ்* (United States) *தேசத்துக் கவி. இவருடைய பாட்டில் ஒரு புதுமை என்னவென்றால், அது வசன நடை போலதான் இருக்கும். எதுகை, மோனை, தளை ஒன்றுமே கிடையாது. எதுகை மோனை இல்லாத கவிதைதான், உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும் பகுதியாகும். ஆனால் தளையும் சந்தமும் இல்லாத கவிதை வழக்கமில்லை.*

*வால்ட் விட்மன் "கவிதையைப் பொருளில் காட்ட வேண்டுமேயல்லாது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோஜனமில்லை" என்று கருதி ஆழ்ந்த ஓசை மாத்திரம் உடையதாய் மற்றபடி வசனமாகவே எழுதிவிட்டார். இவரை ஐரோப்பியர் காளிதாசன், கம்பன், ஷேக்ஸ்பியர், மில்டன், கெத்தே முதலிய மகாகவிகளுக்கு ஸமான பதவியுடையவராக மதிக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறார். இதிலிருந்து பாரதி தன்னுடைய மொழி நடையில் எளிமையான நடையை கையாண்டுள்ளார். மேலும், பல்வேறு அயல் நாட்டுக் கவிஞர்களின் கவிதைகளை கவனித்துள்ளார் என்பதும் இதன் வாயிலாக அறியமுடிகின்றது.*

**ஸ்ரீ ரவீந்தர திக்விஜயம்**

*ஸ்ரீ ரவீந்தர திக்விஜயம் என்ற கட்டுரையில் (25.8.1921) மகாகவி எழுதியுள்ள புகழ்ச்சி உரையை நாம் என்ன என்று சொல்வது! என்று குறிப்பிடுகிறார்.*

*"கீர்த்தியடைந்தால், மஹான் ரவீந்தரரைப் போலே அடையவேண்டும். வங்காளத்தில் மாத்திரமா? இந்தியா முழுமையுமா? ஆசியா முழுதுமா? ஜெர்மனி, ஆஸ்திரியா, பிரான்ஸ் பூமண்டல முழுமையும் பரவின கீர்த்தி, இத்தனைக்கும் அவர் பாடிய பாட்டுகளோ, வங்க பாஷையிலே உள்ளன. வெறும் மொழி பெயர்ப்புக்களைத்தான் உலகம் பார்த்திருக்கிறது. அதற்குத்தான் இந்தக் கீர்த்தி".*

*பாரதியார் உதயசூரிய நாடாகிய ஜப்பானுக்கே சென்று, அங்கு கவிதை எவ்வாறு வளம் பெற்று இருக்கிறது என்பதையும் ஆராயாமல் விட்டுவிடவில்லை. அதனை,*

*சமீபத்தில் "மாடர்ன் ரிவியூ" என்ற கல்கத்தாப் பத்திரிகையிலே "உயோநேநோகுச்சி" என்ற ஜப்பானியப் புலவர் ஒரு லிகிதம் எழுதியிருக்கிறார். அதிலே அவர் சொல்வதென்னவென்றால் - மேற்குக் கவிதையில் சொல் மிகுதி. எண்ணத்தை அப்படியே வீண் சேர்க்கையில்லாமல் சொல்லும் வழக்கம் ஐரோப்பியக் கவிதையிலேயில்லை. எதுகை, சந்தம் முதலியவற்றைக் கருதியும், சோம்பற் குணத்தாலும், தெளிவில்லாமையாலும் பல சொற்களைச் சேர்த்து வெறுமே பாட்டை அது போகிற வழியெல்லாம் வளர்த்துக் கொண்டு போகும் வழக்கம் ஐரோப்பாவிலும்*

அமெரிக்காவிலும் அதிகமிருக்கிறது. தம்முடைய மனதிலுள்ள கருத்தை நேரே வெளியிடுவதில் மேற்குப் புலவர் கதைகளெழுதுவோரைக்காட்டிலும் சக்தி குறைந்திருக்கிறார்கள்.

ஜப்பானில் அப்படியில்லை. வேண்டாத சொல் ஒன்று கூடச் சேர்ப்பது கிடையாது. கூடை கூடையாகப் பாட்டெழுதி அச்சிடவேண்டும் என்று ஒரே ஆவலுடன் எப்போதும் துடித்துக்கொண்டிருப்பவன் புலவனாக மாட்டான். கவிதையெழுதுபவன் கவியன்று. கவிதையாகச் செய்தோன் - அவனே கவி புலவனுக்குப் பணம் ஒரு பொருளன்று. வானத்து மீன், தனிமை, மோனம், மலர்களின் பேச்சு இவற்றிலே ஈடுபட்டுப்போய் இயற்கையுடனே ஒன்றாக வாழ்பவனே கவி.

எனவே பாரதி தனது சிந்தனையை விரிவுபடுத்திக் கிழக்கு, மேற்கு, தெற்கு ஆகிய மூன்று திசைகளிலும் உலகத்திலே என்னென்ன கவிதைப் பரிசோதனைகள் நடந்துவருகின்றன என்று கூர்ந்து கவனித்துவந்துள்ளார்.

**இதழியலில் பாரதி**

“சுதேசமித்திரன்”, “இந்தியா” போன்ற செய்தித் தாள்களில் நாட்டு விடுதலை குறித்துக் காரசாரமான பல கட்டுரைகள், கவிதைகளை எழுதினார். கேலிச் சித்திரங்கள் வரையச் செய்து உணர்ச்சியூட்டினார். தேசிய கீதங்கள் பாடி, நூலாக வெளியிட்டும், தாமே பல கூட்டங்களிற் பாடியும் சுதந்திர ஆவேசத்தை உண்டாக்கினார்.

பாரதியாரின் தீவிரச் செயல்களையும் ‘இந்தியாவில்’ அவர் எழுதிய கட்டுரைகளையும் அதனால் நாட்டில் விடுதலை பரவத் தொடங்கி விட்டதையும் கண்ட வெள்ளை அரசினர் அவரைச் சிறை பிடிக்க முயன்றபோது, புதுவைக்குப் போய் அங்கும் அடக்கு முறைக்கு ஆளானபோதும் வறுமை வாட்டிய போதும் “இந்தியா” “விஜயா” முதலிய இதழ்களையும் மாற்றி மாற்றி நடத்திக் கட்டுரைகள் எழுதியும் கவிகள் பாடியும் நாட்டு விடுதலைக்கு அயராது பாடுபட்டார்.

**தேசியகவி பாரதி**

“பாரத நாடு” என்ற தலைப்பில் “வந்தேமாதரம்” தொடங்கி “ஜாதியகீதம்” முடியப் பத்தொன்பது தலைப்பமைந்த பாடல்களும், “சுதந்திரம்” என்ற தலைப்பின்கீழ் சுதந்திரப் பயிர், சுதந்திரத் தாகம், சுதந்திர தேவியின் துதி, விடுதலை, சுதந்திரப்பள்ளு என்ற பாடல்களும் “தேசிய இயக்கப் பாடல்” என்ற தலைப்பில் சிவாஜி, கோகலே, திலகர், சிதம்பரனார் போன்றாரது சிறப்புப் பற்றிப் பாடிய பாடல்களும், நடிப்புச் சுதேசிகளைச் சாடிய பாடல்களும், “தேசியத் தலைவர்கள்” என்ற தலைப்பிட்டுக், காந்தியடிகள், குருகோவிந்தர், தாதாபாய் நௌரோஜி, திலகர், லஜபதிராய், வ.உ.சி. முதலியோரை வாழ்த்திப் பாடிய பாடல்களும் தேசப் பற்று பாடல்களாக அமைந்துள்ளன.

பாரதியார் பாரத நாட்டின் நிலையை எண்ணினவர், அடிமை வாழ்வை நினைத்தார். அடிமைத் தளையை அறுத்தெறிதலில் முனைந்தார், எழுத்துகளாலும், பேச்சுகளாலும், செயலாலும், கவியாலும் விடுதலை வேட்கையை நாட்டில் கொண்டுவந்தார்.

நாடு விடுதலை பெறவேண்டுமானால், மக்கள் முதலில் தம் நாட்டின் பெருமையை உணரவேண்டும் என எண்ணினார். அதனால் முதன் முதலாக நாட்டின் பெருமையைக் பாடல்களின் வாயிலாக நாட்டுப்பற்றை மக்களிடம் கொண்டுசேர்த்தார்.

***பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள்***
***பாரத நாடு”***

*"ஞானத்திலே பரமோனத்திலே" எனத் தொடங்கி 'நதியின் சிறப்பினிலே உயர் நாடு பாரதநாடு" என்பது முடியப் பாரத நாட்டின் சிறப்பை மேலும் மேலும் சொல்லிக் கொண்டே போனார்.*

*"மன்னும் இமயமலை எங்கள் மலையே" என்றார். மக்கள் மனத்தே நாட்டுப்பற்று முகிழ்த்தது வந்தேமாதரம் என்போம். எங்கள் மாநிலத் தாயை வணங்குதுமென்போம்" என வந்தே மாதரக் கீதம் இசைத்துத் தாய்த்திரு நாட்டுக்குத் தலை வணங்கச் செய்தார். தாய் நாட்டின்மீது அன்பு செலுத்தித் தலை வணங்கிவிட்டால் மட்டும் போதுமா? விடுதலைக்குப் போரிட வேண்டாமா? நாட்டு விடுதலைக்குப் போராடும் மக்கள் சாதியால், சமயத்தால், மொழியால் இனத்தால் எனப் பல்வேறு பிரிவுபட்டு ஒற்றுமை சிதைந்து தமக்குள்ளேயே சண்டையிட்டு வருவதைக் கண்டார்; மன முருகினார்.*

*தாயின் வயிற்றில் பிறந்தோர் தம்முள் சண்டை செய்தாலும் சகோதரர் அன்றே? என்று கூறித் தாய் நாட்டுச் சகோதர்கள் அனைவரையும் வாருங்கள் வாருங்கள் என்று பாடினார். "வேற்றுமைகளைத்து அனைவரும் ஒன்றுபடவில்லை என்றால் தம் நாட்டுக்கு விடுதலை கிடைக்காது என்பதை ஆணித்தரமாக உணர்த்தினார். எடுத்த எடுப்பிலேயே, முதற் பாட்டிலேயே*

***ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே - நம்மில்***
***ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வே***
***நன்றிது தேர்ந்திடல் வேண்டும் - இந்த***
***ஞானம் வந்தாற்பின் தமக்கெது வேண்டும்?"***

*என, ஒற்றுமைப் போராட்டத்திற்கும் வழிகோலினார்.*

***"எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்***
***எல்லோரும் இந்திய மக்கள்***
***எல்லோரும் ஓர் நிறை எல்லாரும் ஓர்விலை***
***எல்லாரும் இந்நாட்டு மன்னர்"***

*என்றுபாடி "நாம் அனைவரும் சுதந்திரம் பெற்ற நாட்டில் எந்த வகையிலும் ஒப்பானவர்களே. நமக்கு இனி எண்ணவுரிமை, எழுதவுரிமை, பேசவுரிமை முதலிய எல்லா உரிமைகளும் உண்டு. எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற தொடரால் இந்நாட்டுக் குடிமகன் யாராயினும், ஏழையாயினும், செல்வராயினும் எல்லோரும் ஊர்த்தேர்தல் முதல் பாராளுமன்றத் தேர்தல் வரை நிற்கலாம். நின்று வென்றால் நாட்டின் தலைவராகவும் வரலாம். என்ற அடிப்படை சட்டத்தினை மக்களிடம் கொண்டு சேர்த்தார்.*

*இவ்வாறு பாரதி தம் எண்ணத்தாலும், பேச்சாலும், எழுத்தாலும், கவிகளாலும், செயல்களாலும், தேசிய வித்திட்டு, தேசிய நீர் பாய்ச்சி தேசீயப் பாடல்கள் பாடுவதில் மிகுந்த வெற்றி பெற்றுவிட்டார். வீரயுகப் பாடல்களைப் பாடினார். உறங்கிக் கொண்டிருந்த தமிழகம் அவருடைய தேசீயப் பாடல்களால் விழிப்புற்றது. இன்றும் இப்பாடல்கள் தழைத்தோங்கியுள்ளன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.*

**புரட்சிக்கவி பாரதி**

*இவருடைய உருவம், தோற்றம், எண்ணம், எழுத்து, பேச்சு, பாட்டு, செயல் அத்தனையிலும் ஓர் புரட்சியைக் காணலாம்.*

*மெலிந்த ஒற்றை நாடி உடல், ஒட்டிய கண்ணம், உட்குழிந்ததாயினும் ஒளி பொருந்திய கண்கள், முறுக்கி விட்ட மீசை, வால் விட்ட தலைப்பாகை, தொங்கும் அல்பாகா கோட்டு, கச்சங்கட்டிய வேட்டி இதுவே உருவத் தோற்றமாக அமைகின்றன.*

*பாரதியார் மக்களுள் சரிபாதியாகிய பெண்கள் அடிமைப்பட்டுக் கிடக்கும்போது சமூகமும் முன்னேறாது நாடும் விடுதலை அடையாது என்பதைக் கண்டார். சாதியில் ஒருவன் வாழ்ந்தவன் ஒருவன் தாழ்ந்தவன் என்ற நிலை இருக்கும் வரை இழிவு நம்மை விட்டுப் போகாது என்பதை உணர்ந்தார். அவை குறித்தே பேசினார்; எழுதினார்; செயலாற்றினார்.*

*மதங்கள் யாவும் ஒன்றே அவற்றுள் புதைந்து கிடக்கும் உண்மையும் ஒன்றே என்பது மகாகவின் கூற்று. இக்கூற்றினை,*

***பூமியிலே, கண்டமைந்து, மதங்கள் கோடி!***
***புத்தமதம், சமணமதம், பார்ஸி மார்க்கம்***
***சாமியென யேசுபதம் போற்றும் மார்க்கம்***
***ஸநாதனமாம் ஹிந்துமதம், இஸ்லாம், யூதம்***
***நாமமுயர் சீனத்துத் தாவு மார்க்கம்,***
***நல்ல கண்பூசி மதம் முதலாம் பார்மேல்***
***யாமறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே;***
***யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங்கொன்றே***

*என்ற பாடலின் வழி அறியமுடிகின்றது.*

*எல்லோருக்கும் வயிறார உணவு கிடைக்க வேண்டும். ஏழையென்றும் அடிமை என்றும் எவனுமே இருக்கக் கூடாது என்ற அவர் கருத்தினை,*

***“தனியொருவனுக்கு உணவில்லையெனில்***
***சகத்தினை அழித்திடுவோம்”***

*என்று ஆவேசத்தோடு கூறுகின்றார்.*

*“ஒருவனுக்கு உணவில்லை என்பதற்காக உலகத்தையே அழித்துவிடுவோம்” என்ற புரட்சிக் கூற்றுப் போல பாரதியாருக்கு முன்னரும் யாரும் கூறியதில்லை. அவருக்குப் பின்னரும் யாரும் கூறத் துணியவில்லை. புரட்சிக் கருத்துடைய பொதுவுடைமையாளரும் கூடக் கூறத்துணியாத கருத்தை நம் நாட்டில் பொதுவுடைமைத் தத்துவம் பரவத் தொடங்காத காலத்திலேயே கூறினாரென்றால் பாரதியாரைப் புரட்சிக்கவி என்பதற்கு இதை விட வேறு என்ன சான்று வேண்டும்? என்று புலவர் நக்கீரன் பல்கோண பாரதி என்ற நூலில் பக்.53 இல் குறிப்பிடுகிறார்.*

**முடிவாக**

*பாரதி தம் பாடல்களில் கையாண்ட உத்தி எளிமையான நடை, தேசப்பற்று, அனைத்து மக்களிடம் ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாது என்பதையே தொடர்ந்து பாடல்களின் வாயிலாக வலியுறுத்தி வந்துள்ளார். நாட்டின் விடுதலை, சுதந்திரம் மீது தனி கவனம் செலுத்தியுள்ளார். இவற்றையெல்லாம் கொண்டு சேர்ப்பதற்கு அவர் பயன்படுத்தியது இதழியல் என்ற ஊடகம். எனவே இவருடைய கவிதை நடை தனி நடை என்றே குறிப்பிடலாம்.*

**பயன்பட்ட நூல்கள்**

1. கருணாகரன், கி. பாரதி தமிழ், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1989.
2. கோதண்டராமன்,ப., புதுவையில் பாரதி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1990.
3. புலவர் நக்கீரன், பல்கோண பாரதி, வள்ளி பதிப்பகம், மன்னார்குடி, 1990.
4. பெரியசாமித்தூரன்,ம.ப., பாரதியார் நூல்கள் ஒரு திறனாய்வு, வானதி பதிப்பகம், 1982.
5. மீரா, பாரதியம் (கட்டுரைகள் தொகுப்பு), அன்னம், சிவகங்கை, 1983.
6. ஜெயா,வ., பாரதி மொழிநடை, ஜெயா பதிப்பகம், மதுரை, 1989.

## References

1. Karunakaran, K. Bharathi Tamil, Manivasagar Publishing House, Chennai, 1989.
2. Kothandaraman, P., Bharathi in Puducherry, Palaniappa Brothers, Chennai, 1990.
3. Poet Nakkheeran, Polygona Bharathi, Valli Publishing House, Mannargudi, 1990.
4. Periyasamythuran, M.P., A Review of Bharathiyar's Works, Vanathi Publishing House, 1982.
5. Meera, Bharathiyam (Collection of Articles), Annam, Sivaganga, 1983.
6. Jaya, V., Bharathi Language, Jaya Publishing House, Madurai, 1989.